**JAMAL MOHAMED COLLEGE(Autonomous)**
**TIRUCHIRAPPALLI 620 020**

**Department of Visual Communication**
**B.Sc., Visual Communication**

# அவதூறு (Defamation) - (Media Laws and Ethics) Part -7

**அவதூறு (Defamation)**
**எழுத்திலான அவதூறு (Libel), வாய்மொழியான வசைதூற்றல் (Slander)**




## (Media Laws and Ethics) Part -7


கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)
முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்
Dr. Ragunathan, Assistant Professor


**அவதூறு (Defamation)**

**உரிமையியல் சட்டப்படி பிரிவு 499ன் கீழ்**

**இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 499ன் கீழ் தண்டனைக்குரிய குற்றம்.**

உரிமையியல் மற்றும் குற்றவியல் சட்டப்படி இந்த அவதூறு வழக்கு மற்றும் மானநஷ்ட வழக்கு என்றழைக்கப்படுகின்றது.

இரு வகைப்படும் அவைகள்

- எழுத்திலான அவதூறு (Libel)
- வாய்மொழியான வசைதூற்றல் (Slander)

**எழுத்திலான அவதூறு (Libel)**

எழுத்திலான அவதூறு என்பது எழுத்து வடிவமாகவோ, அச்சு வடிவமாகவோ, உருவ வடிவமாகவோ நிரந்தரமாக இருக்கக்கூடிய ஒரு நிலையில் வெளியிட்டிருப்பது.

- எழுத்து வடிவமாகவோ
- அச்சு வடிவமாகவோ
- உருவ வடிவமாகவோ நிரந்தரமாக இருக்கக்கூடியது

**வாய்மொழியான வசைதூற்றல் (Slander)**

ஒருவர் பார்வைக்கு வெளிப்படையாக தெரியும்படி தெரிவிக்கக்கூடியது. வாய்மொழி வசைதூற்றல் என்பது ஒருவரைப் பற்றி

- வாய்மொழியாக அவதூறு கூறுவது
- பழித்துப் பேசுவது

இவ்வாறான செய்கை அந்த நபரின் மனதை புண்படுத்துவதுடன் அந்த செய்தியை செவிவழி கேட்கக்கூடியது.

**ஊடகளுக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பு**

பொதுவாக இவ்வாறான அவதூறு வழக்குகள் பத்திரிகையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் அல்லது தொலைக்காட்சி நிறுவனர்கள்ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யக்கூடிய ஒரு வழக்காகவே இன்றைய நிலையில் இருந்து வருகிறது.

இவ்வழக்கை வழக்கு தாக்கல் செய்யக்கூடியவர்களாக இருப்பவர்கள் பெரும்பாலும் தொழிலதிபர்கள், தொழில் நிறுவனங்கள், சமுதாயத்தில் முக்கிய புள்ளிகளாக திகழக்கூடிய அரசியல்வாதிகள், சினிமா நடிகர், நடிகைகள் போன்றவர்களாகவே இருக்கிறார்கள்.

**இவ்வழக்கிற்கும், கருத்துச் சுதந்திரம் (Freedom of expression) தொடர்பு**

இவ்வாறான வழக்குகளில் பத்திரிகை சுதந்திரம் அல்லது வெளியீட்டாளர்களின் சுதந்திரம் அல்லது நம் அரசியல் சாசனம் குறிப்பிடக்கூடிய கருத்துச் சுதந்திரம் (Freedom of expression) என்று கூறி அதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள எண்ணுபவருக்கு தங்கள் செயல் சட்டத்தின் முன் தவறாக இருப்பின் தோல்வியே மிஞ்சும் இருக்க குறிப்பிட்டு சொல்லலாம்.

**மேலும் சட்டம் 1973 சட்டப்பிரிவு 199 உட்பிரிவு 1-இன் படி**

குற்றவியல் விசாரணை முறை சட்டம் 1973 சட்டப்பிரிவு 199 உட்பிரிவு 1-இன் படி, அவமதிப்புக்கு உள்ளானவர்கள் தான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும்.

குற்றவியல் விசாரணை முறை சட்டம் 1973 சட்டப்பிரிவு 199 உட்பிரிவு 2-இன் படி குடியரசுத் தலைவர், துணைத்தலைவர், மாநில

ஆளுநர், மத்திய மாநில அமைச்சர்கள் அவமதிப்புக்கு ஆளானால் ,அவர்கள் சார்பில் அரசு வழக்குரைஞர் வழக்குத் தொடரலாம்.

**தண்டனை மற்றும் அபராதம் விவரம்**

அவதூறுக் குற்றத்துக்கு இரண்டாண்டுகள் வரை சிறைத்தண்டனை, அல்லது அபராதம், அல்லது இரண்டும் விதிக்கலாம்.

**சட்டப்பிரிவுகள்**

இந்திய தண்டனை சட்டம் 1860 சட்டப்பிரிவுகள் 499,500.
இ.த.ச 499 ஆம் பிரிவு அவதூறு எதுவென்பதை விளக்குகின்றது.
இ.த.ச 500 ஆம் பிரிவு அதற்கான தண்டனை என்ன என்பதைக் குறிப்பிடுகின்றது.

கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)
முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்
Dr. Ragunathan, Assistant Professor

Posted 19th July 2020 by LinisRagunath (லினிஸ் ரகுநாத்)
Labels: STUDY MATERIAL